சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 08.05.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

**•••••**

**வழக்கு எண். SA 6330/E/2024**

திரு.கோவை எஸ்.எஸ்.மனோ -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
சார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம், — பொது அதிகார அமைப்பு
அயனாவரம் வட்டம், சென்னை-102.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 28.01.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திரு.செ.பிரகாசம், சார் ஆய்வாளர், அயனாவரம் வட்டம், சென்னை அவர்கள் இவ்வாணையத்தில் 08.05.2026-ல் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 18.02.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் அழைக்கக்கூடிய காலகட்டத்தில், தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல்கள் 2026 தொடர்பான பணியில் ஈடுபட்டிருந்ததாகவும், எனவே, மனுதாரர் மே மாதம் 7-ஆம் தேதிக்குப் பின்னர் ஏதாவதொரு வேலை நாளில் பொது அதிகார அமைப்பினை அணுகி தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டுக் கொள்ளுமாறு மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலரின் கடிதம் எண்.21/2026, நாள் 21.03.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, 28.01.2026 தேதியிட்ட ஆணையத்தின் உத்தரவின்படி மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டது குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்க 15 நட்கள் கால அவகாசம் வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தைக் கோரியுள்ளார்.

3. மேற்படி பொதுத் தகவல் அலுவலரின் கோரிக்கையினை ஆணையம் ஏற்கிறது. மேலும், பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் பார்வையிட மீண்டும் கடிதம் அனுப்பி, மனுதாரர் ஆவணங்களை பார்வையிட்ட பின் மனுதாரர் கோரும் ஆவணங்களை (28.01.2026 தேதியிட்ட உத்தரவில் குறிப்பிட்டுள்ளவாறு) மனுதாரருக்கு வழங்கி, அதுகுறித்த எழுத்துப் பூர்வமான அறிக்கையினை, **இவ்வாணையத்தில் 05.06.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6330/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ சார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அயனாவரம் வட்டம், சென்னை-102.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.கோவை எஸ்.எஸ்.மனோ, த/பெ.எஸ்.சுந்தர ராஜுலு,
வி-2, ஆர்சி என்கிளேவ்,
36, செல்வம் நகர்,
பொன்னியம்மன் மேடு, சென்னை-600 110.

Copy to: File MP/PA,